**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.107/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.10** |
| **Name** | **:** | **திரு. கே. பிச்சாண்டி** |
| **Father's Name** | **:** | **திரு. கிருஷ்ணன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரிகள் 3 மற்றும் 4 ஆஜர். எதிரிகள் 1 மற்றும் 2 இறந்துவிட்டனர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.08.2026.**

**முதல் விசாரணை -**

நான் 30.04.2025 அன்று வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 03.05.2013 அன்று பிரம்மதேசம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது காலை 7.30 மணிக்கு, ராஜீவ் காந்தி என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்த புகாரை பிரம்மதேசம் காவல் நிலைய குற்ற எண்.136/2013, சட்டப்பிரிவுகள் 341, 506(2) இ.த.ச. உ/இ 3 PPD Act வழக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.15**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

அதன் பிறகு, 03.05.2013 அன்று காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஏழுமலை, பாண்டியன் ஆகியோா் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் ஆகியவற்றை தயாா் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.16**-ஆகவும் பார்வை மகசர் **அ.சா.ஆ.17**-ஆகவும் குறியீடுச் செய்யப்படுகிறது. அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் எரிந்த நிலையில் எரிக்கப்பட்ட இரும்பு தகடு ஒன்று, பஸ் டயர் தூள், பஸ்ஸின் உடைந்த கண்ணாடி தூள் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன்.

அவ்வாறு கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.18**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எரிந்த நிலையில் எரிக்கப்பட்ட இரும்பு தகடு **சா.பொ.2**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பஸ் டயர் தூள் **சா.பொ.3**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பஸ்ஸின் உடைந்த கண்ணாடி தூள் **சா.பொ.**4-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செய்யாறு அவா்களின் C.P.No.67/2013-ல் கைப்பற்றப்பட்டது. இவை அனைத்தும் இந்நீதிமன்ற C.P.No.12/2021-ல் படிவம் 91 மூலம் அனுப்பப்பட்டது. அந்த படிவம் 91 **அ.சா.ஆ-19**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை பிரம்மதேசம் புதூர் கூட்ரோடு அருகில் காலை 10.30 மணிக்கு எதிரிகள் மாதவன், ரவிச்சந்திரன், பாஸ்கரன், சண்முகம் ஆகியோா்களை கைது செய்வதற்கான காரணம் தெரிவித்து அவா்கள் தானாக முன்வந்து 1. ஸ்ரீதரன் மற்றும் 2. செந்தில் குமாா் ஆகியோா்கள் முன்னிலையில் எதிரிகள் தானாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலுமின்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். எதிரி மாதவன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.20**-ஆக

குறியீடுச் செய்யப்படுகிறது. எதிரி ரவிச்சந்திரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.21**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எதிரி பாஸ்கரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.22**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எதிரி சண்முகம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.23**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

அதன் பிறகு, 03.05.2013 அன்று சாட்சிகள் ராஜீவ் காந்தி, வசந்தி, பாக்கியராஜ், குணா, காவேரி, பன்னீர்செல்வம், ஏழுமலை, பாண்டியன், ஸ்ரீதரன், செந்தில்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு, எதிரிகளுடன் நிலையம் சேர்ந்து அன்றே (03.05.2013) மதியம் 14.00 மணிக்கு கைது செய்யப்பட்ட எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

அன்றே 03.05.2013 சம்பவ இடத்தில் போட்டோ எடுத்த போட்டோகிராபர் திரு. பூபதி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், ஆரணிக்கு அனுப்பி வைத்து வாகன ஆய்வறிக்கை வழங்கிய வாகன ஆய்வாளர் சிவராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் அரசு தானியங்கி பணிமனை, வேலூரில் வாகனத்தின் சேதார மதிப்பீடு அறிக்கை பெற்றுக் கொள்ளுமாறு சொல்லிவிட்டார். 08.05.2013 தேதியிட்ட அந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.14-ஆக குறியீடுச் செய்யப்பட்டுவிட்டது. இத்துடன் என்னுடைய புலன் விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. எஸ். முருகன் என்பவரின் பார்வைக்காக

வைத்துக் கொண்டேன்.

காவல் ஆய்வாளர் திரு. எஸ். முருகன் என்பவர் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு நான் விசாரித்த சாட்சிகள் சரியான முறையில் இருந்ததால் என்னிடம் சாட்சியம் அளித்த சாட்சிகள் என்னிடம் சொன்னது போல் காவல் ஆய்வாளர் திரு. எஸ்.முருகன் என்பவரிடம் அதே போன்று சாட்சியம் கூறியதால் மறுவாக்குமூலம் ஏதும் பதிவு செய்யாமல் இவ்வழக்கில் உதவி இயக்குநர், குற்றவியல் தொடர்வு, திருவண்ணாமலை அவர்களிடம் கருத்துரை பெற்று சட்டப்பிரிவு 341, 506(2) இ.த.ச. உ/இ 3 of PPD Act-ன் படி எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

சம்பவ இடத்தில் தீயிட்டு கொளுத்தி பேருந்து எரித்ததில் அதன் மதிப்பு ரூ.18,51,350/- அளவிற்கு ஏற்படுத்தியுள்ளதாக காவல் ஆய்வாளர் திரு. எஸ்.முருகன் என்பவர் குறிப்பிட்டு 12.09.2013 அன்று எதிரிகள் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

அ.சா.1 தன்னுடைய புகாரில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டோ அல்லது எதிரிகளை அடையாளப்படுத்தியோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தயார் செய்ததாக சொல்லப்படும் மாதிரி வரைபடத்தில் எரிந்ததாக சொல்லப்படும் டயரோ, கண்ணாடி துகள்கள் மற்றும் இரும்பு தகடு ஆகியவற்றை பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

நான் தயாரித்ததாக சொல்லப்படும் பார்வை மகசர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் சாட்சிகளின் விசாரணை

வாக்குமூலம் ஆகியவற்றில் நான் கையொப்பம் மட்டும் தான் செய்துள்ளேன், அவைகளில் தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சேதார மதிப்பு குறித்து எவ்வித சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் பார்வை மகசர் சாட்சிகள் ஏழுமலை, பாண்டியன் ஆகியோர் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்ததாக நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளனர் என்றால் அது சரியல்ல. இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான ஸ்ரீ தரன் மற்றும் செந்தில் குமார் ஆகியோர் இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது எனவும், எதிரிகளை தெரியாது எனவும் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லியுள்ளனர் என்றால் அது சரியல்ல.

நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமலும், சம்பவ இடத்திற்கு சென்று சரியான முறையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் ஆகியவற்றை தயார் செய்யாமலும், அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த எதிரியும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகள் கொடுத்திருந்தால் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியிருப்பேன் என்றாலும் அதனால் தான் நான் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல.

எதிரிகளின் பெயர், அடையாளம் தெரியாமல் இருப்பதால் எதிரிகளை கண்டுபிடிக்க முடியாத வழக்கு என்பதால், ஆஜர் எதிரிகளின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த

வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

JAYASREE C
Digitally signed by JAYASREE C
Date: 2026.08.04 17:58:41 +0530

Additional Sessions Judge,
Arani.